Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஞ (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சூஎ] யாழ்ப்பாணம்:- ஜயஹு பங்குனிமீ உசூஉ வெள்ளிக்கிழமை (8 APR. 1955) [இல - உ]

## எரிக் கிரையானதாம் இந்துக்கல்லூரி

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் ஒரு பகுதி திங்கட்கிழமை இரவு தீக்கிரையாயிற்றும். வேண்டுமென்று செய்யப்பட்ட செயலென இது கருதப்படுகின்றது.

## வீர நாடோடிகளின் வெற்றி

மூகலாயச் சக்கரவர்த்தி சித்தூர்க் கோட்டையைக் கைப்பற்றியபொழுது அங்கே வசித்த "லோகார்" என்னும் வகுப்பினர் அச் சக்கரவர்த்தியின் கீழ் வசிக்க மறுத்து, சித்தூர்க்கோட்டை சுதந்திரமடையும் வரையில் அங்கே வாழமாட்டோமென்று சபதஞ்செய்து, 400 ஆண்டுகள் நாடோடிகளாய்த் திரிந்தனர். இப்பொழுது இந்தியா சுதந்திரமடைந்தமையால் அவர்கள் வெற்றி பெற்ற சுதந்திரராய் பண்டித நேரு அவர்கள் தலைமையில் தங்கள் ஊருக்கு மீண்டுவந்தனர்.

காப்பியக் கலைக்கா

# 'சுந்தர காண்டம்' என்று மகுடஞ் சூட்டியதேன்?

## அழகுக் களஞ்சியமாயமைந்த சிருங்காரச் சிறப்பினுல் என்க

### கம்பன் சௌந்தரியக் கலை

( தோற்றுவாய் )

காப்பியத்தின் சௌந்தரியகலை அதன் நடுமையமாக அமையும்; நிகழ்ச்சிகளைப்பொறுத்து அமையும். காப்பியக் கலையின் நுணுக்கங்களையும் ஏற்ற இறக்க உணர்ச்சித்தரங்களின் வரம்புக்கு உட்பட்ட போக்கையும் நன்கு உணர்ந்த மகாகவி அந்த நிகழ்ச்சிகளில் சௌந்தரிய அமைப்புச்செறிய வைத்துக் காட்டுவான்.

காப்பிய நேயர்கள் மூற்றிலும் தம்மை மறந்து ஈடுபடத் தக்க அம்சங்கள் அப்போதுபூரணமாக இருக்கும். இராமாயணத்தைப் பொறுத்தமட்டில் சுந்தர காண்டம் அத்தகைய சௌந்தரியக் கலைக்களஞ்சியமாக விளங்கும் தகுதியைத் தனக்கேஉரியதாகப் பெற்றுக்கொண்டு விடுகி

மதுரை
திரு நா. பார்த்தசாரதி

றது. இராமாவதாரக் கதையின் பாவிகக் கருத்து (Central idea of the epic) சுந்தரகாண்டத்தில்தான் வந்து சேர்கின்றது. சுந்தர காண்டத்திற்கு உள்ள இந்தத் தன்னிகரற்ற தனிச் சிறப்பு கம்பனுடைய சௌந்தரிய சாகஸத்தால் பன்மடங்கு ஒளிபெற்று விடுகிறது.

மற்றொருசெய்தி, பொதுவாக இங்கே காரணம் ஆராய்வதற்கு ஏற்றதாகிறது. அயோத்தியில் நிகழும் நிகழ்ச்சிகளைக் கூறும் காவியப் பகுதிக்கு அயோத்தியா காண்டம் என்று பெயர். அதே மாதிரியே, ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம் என்ற பெயர்களும் ஏற்பட்டன. இந்த முறைப்படி பார்த்தால் இலங்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகளையே பெரும்பாலும் கூறும் இக் காண்டத்திற்கு "இலங்கா காண்டம்" என்பதுபோன்ற ஓர் பெயரல்லவா பொருத்தமாக வழங்கப்பட்டிருக்க வேண்டும்? கம்பனும் வால்மீகியும் சுந்தரகாண்டம் என்றே பெயரை அமைத்துக் கொண்டது ஏன்? கூறப்படும் நிகழ்ச சிலை ஒட்டிப் பெயரை அமைக்காமல் நிகழ்ச்சியின் சௌந்தரியப் போக்குக்கு ஏற்பப் பெயரிட்டுக் கொள்வானேன்? சௌந்தரியம் இருப்பதனுல் பெயரிட்டனர் என்றுல் ஏனைக் காண்டங்களில் அந்த சௌந்தரியம் இல்லாமற் போய்விட்டது என்று பொருளா? இதனைச் சற்றே விரித்து விளக்கல் வேண்டும்.

காவிய நாயகனிட மிருந்து பிரிக்கப்பட்ட நாயகி அந்தப்பிரிவினுலே அடையக்கூடிய கலக்கத்தில் சோகபாவத்தோடு கூடிய சிருங்கார மென்மை அமைந்திருக்கிறது. மனத்தை உருக்கும் நிலையில் பிரிவுழி கலங்கல் என்னும் இந்தச் சுவையைப் பிராட்டியின்பால் விளங்குவதாக அமைத்துக்காட்டும் சௌந்தரியம் இக் காண்டத்தில் உள்ளமையால் இது சுந்தர காண்டமாயிற்று என்பர். இது விப்பிரலம்ப சிருங்காரம் எனப்படும். இஃது ஒருவகையால் ஏற்கும காரணமேயாகும்.

இனி, அனுமன் தூது மூலமாக இராமனின் சௌந்தரியங்களைச் சீதையும், சீதையின் கற்புநிலை பிறழாத மனத் திண்மையாகிய சௌந்தரியத்தை இராமனும் அறிந்துகொள்கையினுல் சுந்தர காண்டமாயிற்று என்றும் ஓர் அழகான அமைதி கூறலாம். உருக்காட்டு படலம் முதலிய படலங்களில் தேவியைக் கண்டு அனுமன் இராமபிரானின் சுக சௌகரிய நிலைகளை விவரிப்பதும், திருவடிதொழுத படலத்தில தேவியின் மனம் பிறழாத தூய்மையை இராமனுக்கு உரைப்பதும், இக் காண்டத்தில் இடம்பெறுகின்றமை இங்கே சிந்திக்கத் தக்கது.

பேணநோற் றனுமனைப்
பிறவி பெண்மைபோல்
நாணம்நோற் றுயர்ந்தது
நங்கை தோன்றலான்
மாணநோற் றீண்டிவள்
இருந்தவா றெலாங்
காணநோற் றிலனவன்
கமலக் கண்களால்,

(காட்சிப் படலம்—73)

நோற்றல் — தவம் செய்தல்
கமலக்கண் — தாமரைப் போலுங் கண்கள்.

என்று அனுமன் சீதையின் பதிவிரதாசக்தியை—

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# தெய்வத்தொண்டு எது?

கரைச்சி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தாரால் வெளியிடப்பட்ட இரணைமடுக் களியாட்டவிழா மலர் மாகாண அதிபதி திரு ஸ்ரீகந்தா அவர்களின் செய்தியுடன் இன்னும் பல அறிஞர்களின் ஆசி உரைகளுடன் நன்முறையில் வெளிவந்துள்ளது. இக்களியாட்ட விழா இனிதே நடைபெற்றது. இம்மலரில் வெளியான ஊக்க உரை பின்வருமாறு.

இயற்கை ஆற்றலின் எழிலுக்கு எடுத்துக் காட்டாக இன்ஞான்று இலங்கிவரும் இரணைமடுக் கழனி மாவட்டத்தில் செறகுவிக்கும் நிமித்தத்தில் ஆங்குத் தொண்டர் படையினரால் நன்கமைக்கப் பெற்ற கல்விக் கழகங்களின் வளர்ச்சிக்காகக் களியாட்டு விழா நிறுவப்பெற்றது சாலவும் பொருந்தும்.

'நமச்சிவாயவே ஞான மூங் கல்வியும்' என்று நாவுக்கரசநாயனர் நயந்துரைத்தவாறு மேன்மைகொள் சைவநீதி விளங்குவதற்கு எந்நாட்டவர்க்கும் இறைவனுகிய சிவபெருமான் என்னும் சித்தம் உண்டாக்கக்கூடிய கல்விக் கழக ஒழுங்குகளைச் சைவத் தொண்டர்களே அமைத்தல் வேண்டும் என்பது யாவரும் அறிந்த உண்மையே.

'வரம்புயர' என்று அடியெடுத்து வாழ்க்கை வளம பெருக்க வழிகாட்டிய மூதாட்டியின் பொன்மொழிக்கிணங்க இரணைமடுக்கழனி மாவட்டம் நீர்வள மிகுந்து நெல்வளம் பொலிந்து வருவதோடு சைவநெறிக் கல்விச்சாலி வளர்ந்து சிவமெனும் விளைவுண்டாகக்கூடிய வகையில் ஒங்குதற்குச் சைவாபிமானிகள் உபகாரிகளாதலே ஒரு தவப்பேறுகும்.

மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்றென்பர். அக்கொடையும் மக்கள் வாழ்வைத் தக்க முறையில் வழிப்படுத்துவதற்கு கந்த தெய்வப் பணிக்காகுமேயானுல் அதன் பயனுக்கிணையேது. 'உழுங்குலத்திற் பிறந்தாரே உலகுய்யப் பிறந்தார்' என்று கம்பர் நன்றுரைத்தாங்கு இரணைமடுக் கழனிமாவட்டம்வாழ் அன்பர்கள் ஈழநாடுய்யப் பிறந்தவர்கள் என்றமட்டில் அமையாது தேவாரத் திருமகிமை பெற்ற இலங்கை சிவநெறிக்கிருப்பிடமாகத் திகழச் செய்வதற்குஆங்குள்ள சைவகழகங்களை விருத்தி செய்தல் அன்னாரின் அருங்கடனகின்றது.

## ஆசிரியர்களுக்கு ஒரே வேதனம்

வருங்காலத்தில் நியமிக்கப்படும் சுயமொழி ஆசிரியர், ஆங்கில ஆசிரியர் ஆகிய இரு பிரிவினருக்கும்ஒரேவேதனம் கொடுக்க அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது.

## அரசாங்க ஆட்சிப் பகுதியில் ஆயுர்வேதம் இடம்பெறுமா?

ஆயுர்வேத வைத்தியம் அரசாங்கத்தால் கையாளப்பட வேண்டிய முறைபற்றிய அறிக்கை ஒன்று மேல்நாட்டு வைத்திய கலாநிதிகள் ஏ எஸ். இராசசிங்கம், வி.இ.பி. செனிவரத்ண, ஆர். எல். ஸ்பிற்றில் ஆகியோ உறுப்பினராய உபசபையால் ஆராயப்படுதற்கு விடப்பட்டிருக்கின்றது. இந் நாட்டின் அரசாங்க சுகாதார ஆட்சிப்பகுதியில் ஆயுள்வேதத்துக்கு இடங் கொடுகும் பொழுது செய்ய வேண்டிய ஒழுங்குகள் மேல்நாட்டு வைத்தியருடைய கருத்தின்படி எவை எவை என்று அறிதல் இவ்வாறு விடதன் நோக்கமாகும்.

## மேற்குப் பாக்கிஸ்தான் முதல் மந்திரி

மேற்குப் பாக்கிஸ்தான் முதன் மந்திரியாக கலாநிதி கான்சாகிப் நியமிக்கப்பெற்றிருக்கின்றார்.

## பிரித்தானிய முதல் மந்திரி ஒய்வு பெறுகிறார்

பிரித்தானிய முதல் மந்திரி சேர் வின்ஸ்ரன சேர்ச்சில் ஓய்வு பெறுகின்றார் ஓய்வு பெறுகின்றார் என்ற வெளிவந்துகொண்டிருந்த செய்திகளின்படி அவர் உண்மையாகவே ஓய்வு பெறுகின்றார் என அறியவருகின்றது. சேர். அன்தொனி ஈடின் அவருடைய இடத்தில் முதல் முந்திரியாகின்றார்.

## தக்காளி இறுத்தல் ஐந்து சதம்

தக்காளி மிகுதியால் வேலணையில் தக்காளி இறுத்தல் ஒன்று ஐந்து சதமாக விற்கப்படுகிறதாம. நிலைமையைச் சமாளித்து மக்களுக்குஉதவும் பொருட்டு மிகுதித் தக்காளியைப் பழப்பாகு செய்து வைத்திருக்க மாதர் சங்கமொன்று முயல்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்.

வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனு மோங்குக
ஆழ்கதீயதெல்லாம் அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

யாழ். ஜய ஹூ பங்குனி மீ
உசு உ வெள்ளிக்கிழமை


## மன்மத ஆண்டிற் பன்னலம் பெருக!

சித்திரைத் திங்களுக்கு ஒரு தனிச் சிறப்புண்டு. ஞாலம் விளக்கும் ஞாயிறு எனும் செழுஞ் சுடரோன் மேடம் புகுவது; வசந்த காலம் மலர்ந்து தவழ்வது; உளங்கனிய இளவேனில் வளந் தோன்றுவது என்ற வற்றோ டமையாது ஆடக மன்றில் ஆடும் அமலனின் அபிடேகத்திற்குரிய திருவோணமும் சிவபெருமான் திருவடிக்கே பதித்தநெஞ்சுடைய திருநாவுக்கரசு நாயனார் திருநாளாகிய சதயமும் மெய்கண்டசாத்திரம் பல தந்த உமாபதி சிவாசாரியாருக்கான அத்தமும் இத் திங்களுக்குத் தெய்வத்திருவளிக்கின்றன. இத்தகைய சீர்பொலிந்த சித்திரையிலே சைவ ஆண்டு தொடங்கும் வேளை ஒருதிருநாளாய்த் தொன்று தொட்டு வழங்கி வருகின்றது.

முன் பல முறை வந்த மன்மத ஆண்டு அடுத்த வியாழக்கிழமை (புதன் இரவு 44 நாடி, 29 விநாடிப் பொழுதில்) ஆரம்பமாகின்றதெனச் சோதிட நூல் வல்லார் தொகுத்துரைத் திருக்கின்றனர்.

"மன்மதத்தில் மாரியுண்டு
வாழு முயிரெல்லாம்
நன்மைமிகு பல்பொருளும்
நன்றாமே .... .... ....

என்ற முதுமொழிக் கிணங்க புத்தாண்டு வருகை நல்வரவாகும் என்று மகிழ்ச்சியுடன் எதிர்பார்க்கின்றேம்.

கோளும் நாளும் எவ்வாறு கொடுமை செய்யினும் அஞ்சுவ தியாதொன்றுமில்லை அஞ்ச வருவது மில்லை என்று உள்ளத் துணிவு அளித்தார் அப்பர் அடிகள். யாருக்கு அச்சமில்லை? 'ஒடுங்கெடிலப் புனலும் உடையாரொருவர்தமர்" ஆகிய சைவநன் மக்களுக்குஎன்க.

மண்பா தலம்புக்கு
மால்கடல் மூடிமற்றே
மூலகும்
விண்பால்திசைகெட்டிரு
சுடர்வீழினும் அஞ்சல்
நெஞ்சே.

என்ற சொல்லரசர், இத்துணிவுக்குக் காரணம், நெற்றிக்கடவுட் சுடரான் கழி

## விசேட விஞ்ஞாபனம்

யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலையிலும், இந்துசாதனக் காரியாலயத்திலுங் கடமையாற்றுவோருக்கு 14-4-55 தொடக்கம் 20-4-55 முடிய வருடப்பிறப்பின் பொருட்டு விடுமுறைகள் உதவப்படுதலால், குறித்த 7 தினங்களிலும், இத்தாபனங்களில் எவ்வகையான கருமங்களும் நடவா; மேலும், அடுத்த வெள்ளிக்கிழமை 15-4-55 இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்கள் வெளிவரா, என்பதை அபிமானிகட்கு வியசத்துடன் தெரிவிக்கின்றேம்.

அதிபர்.

அரசியல் அரங்கு

# பொதுத்தேர்தல் யானைவரவுக்கு மணியோசையா?

## உத்தியோகத்தர் படி உயர்ச்சி

வேண்டிய வரம் பெறும் வரைக்கும் உள்ளத்து ஊக்கம் குன்றாது இயமதருமரைப் பின்றொடர்ந்த சாவித்திரி போல விரும்பியவற்றை அடைந்தாலன்றி ஓயமாட்டோம் என்று அரசாங்கப்பகுதி உத்தியோகத்தர்கள் முதன்மந்திரியை நிழல்போலப் பற்றி நிற்கின்றார்கள். முதல் வரம் ஒன்று தந்தேன் என்று முதல் அமைச்சர் கூறிவிட்டார் ஆனல் இதன் பொழிப்பென்ன என்பதே அரசியல் வட்டாரத்திற் பேச்சாயிருக்கின்றது.

அடுத்த ஆண்டிற் பொதுத் தேர்தல் வருமென்றும் அதற்கிடையில் உத்தியோகத்தர்களை இடதுசாரிகளின் வலையிற் சிக்காது தடுப்பதற்கு ஆறுதல் கொடுத்தல் அவசியமென்றும ஆதிக்கக் கட்சி ஏற்ற ஒழுங்குகள் செய்து வருகின்றதென்ற கூற்றில்உண்மையில்லாதிருக்க மாட்டாது.

அரசாங்க உத்தியோகத்தர்கள் இடதுசாரிக் கட்சிகளிலே தாமாகச் சிக்கிக் கொள்வதில்லை. பொதுவுடைமைப்புரட்சிக்காரர் நுழைந்துபுகுந்து அரசாங்கத்துக்கு முட்டுக்கட்டை போடும்பொழுது படி உயர்ச்சி வேண்டுகின்றவர்களும் எப்படியும் இந்த எதிர்ப்பு இயக்கத்தில் அகப்பட்டுவிடுகிறார்கள். எல்லாரும் தங்கள் தங்கள்காரியம பார்ப்பதுதான் இக்கால அரசியல் முன்னேற்றமாம்.

### பாராளுமன்றத்தில் 'வெளியேற்ற' நாடகம்

புத்தஜயந்திக்குப் பணம் ஒதுக்கும பிரேரணை விவாதிக்கப்பட்டபொழுது மூறட்டு அங்கத்தவர் திரு சோமசிறி தலைவரின கட்டளைக்கமையாது நின்றதால் சபையினின்றும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டார். அத்துடன் சபை சில நிமிடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டது. இதற்கிடையில் திரு. தகநாயக திரு.எட்மன்டு சமரக்கொடியைத் தற்காலிக தலைவராகப் பிரேரித்துப் பாராளுமன்றக்கூட்டத்தை நடத்தினாராம. அப்பொழுது படிகாவலர் அங்கு வரவும் எதிர்க்கட்சி மெல்ல நகர்ந்ததென்றும் திரு சோமசிறீ வெளியேற்றப்பட்டாரென்றும் செய்திகள் கூறுகின்றன.

புத்த ஜயந்தியால் உலகிற் புரட்சி குறைந்து அமைதி ஏற்படும் என்று உள்நாட்டு மந்திரி திரு. இரத்தினாக சொன்னதுக்கு முழுமாறாகப் புரட்சியே புத்த ஜயந்தி விவாதத்தின்போது நிலவியது குறிப்பிடத்தக்கது.

## சிதம்பரம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் உயர்நிலைப் பள்ளி மாணவர் இலக்கியமன்றம்

இம் மன்றத்தின் ஆண்டு இறுதிக் கூட்டம் 18-3-55 மாலை யோகி திரு. சுத்தானந்த பாரதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வித்துவான் திரு. தம்பிராசா அவர்கள் திரு. பாரதிஅவர்களைவரவேற்று முகவுரை நிகழ்த்தினர்கள்.

கூட்டத்தின் தலைவரவர்கள் தமது சொற்பொழிவிலே முன்னுளில் வடநாட்டில் திரு தயானந்தசரஸ்வதி அவர்கள் தோன்றி சமயப்பணி செய்தார்கள். நமது தென்னுட்டிற்கு ஈழநாடீன்ற தவப்பெருஞ் செல்வர் ஆறுமுகநாவலர் அவர்கள் வந்து சமயப் பணிபல ஆற்றினர்கள். அவர்களது பெறல் அரும பணியால் தென்னுட்டிலே தமிழுஞ் சைவமுந் தழைத்தினி தோங்கி இன்றும் சிறப்புற்று விளங்கிவருகின்றன.

எனவே நம் நாடு முன்னேற வேண்டுமேயானல் சைவ சமயத்தைப்பற்றி நம் மக்கள் நன்கு அறிந்து கொண்டு ஈடேறும் முறையில் சொற்பொழிவாற்றும் சமயத் தொண்டர்கள் தோன்றிப் பணியாற்ற வேண்டும். ஒவ்வொரு மாணவ மாணவிகளும் உண்மையான முறையில் சமயப்பணி செய்யும் தொண்டர்களாக வேண்டும். அப்பணியொன்றே நாம் யாவரும் ஆறுமுகநாவலப் பெருந்தகைக்குச் செய்யும் இடையறாக் கைம்மாறாகும்.

உலகிலுள்ள பல நாடுகளில் ஜப்பான், சீன, பர்மா, திபேத் முதலிய நாடுகளில் பௌத்த மடங்கள்சிறந்துவிளங்குகற்கு அம்மதக் குருமார்கள் மிகுந்த கட்டுப்பாடுகளோடும், ஒழுக்கத்தோடும் சலியாது உழைக்கும் உழைப்பே காரணமாகும். சொல்லுக்கும் செயலுக்கும் மாறுபாடின்றிச் செயலாற்றும் சமயத்தொண்டர்களால்தான் மக்கள் சமயநெறியைக் கண்டுபிடித்து ஒழுகச் செய்விக்க முடியும் என்பதைக் காட்டுகிறது அந்நாடுகளின் சமய வளர்ச்சி.

இவ்வாறு பல நாடுகளிலும் சமய வளர்ச்சி பல்கிப்பெருகி, வளர்வதைக் காணும்பொழுது நமது சைவ சமயமும் தழைத்தோங்கத் தொண்டர்கள் பலர் தேவை. 'சிந்தனை நின்றனக்கு ஆக்கினேன் றன் கண்ணிணை நின் திருப்பாதப் போதுக்காக்கி" எனத் திருவாசகம் அருளுமாறு அவர்கள் தம்மையும பிறரையும் ஆக்குவித்துக்கொள்ள வேண்டும்.

மாணவர்கள் பள்ளியிற் சமய வளர்ச்சியைப்பற்றித் தெரிந்து கொண்டால்தான் நாடு முன்னேற முடியும் என்பதனை வலியுறுத்திவிட்டு சைவ சமய வளர்ச்சிக்காகப் பத்திரிகைகள் பாடுபடல் வேண்டும் என்றும், தனியாகப் பத்திரிகைகள் வெளியிடல் வேண்டும என்றும் கூறினார்கள்.

### மாட்டுமுகக் கத்தரிக்காய்

பசமக் குடியில் (இந்தியா) அதிசயமான கத்தரிக்காயொன்று காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றதாம். இது மாட்டு முகத்துடன், இரு கொம்புகள், வாய், நாக்கு முதலியன வாகத்தோற்றும் உறுப்புக்களையுடையது.

### காரைநகர் சிவகாமி சமேத சிதம்பரேசுவர் கோயில்

பங்குனி மீ 24-ந் திகதி (6-4-55)புதன்கிழமை காலை கோயிலில் விசேஷ பூசையும் பின்பு கொடித்தம்பம் நாட்டு விழாவும் நடைபெற்றன. சைவ அன்பர்கள் பக்தியுடன் இறைவழிபாடு செய்தனர்.

### பொதுத் தேர்தல்

இலங்கையில் பொதுத்தேர்தல் ஒன்று விரைவில் நடக்கக் கூடுமென்று பலர் கருதுகின்றனர். சென்ற வெள்ளிக்கிழமை இரவு சேர். ஜோன் கொத்தலாவல தலைமையில் நடந்த ஐக்கியதேசியக் கட்சிக் கூட்டத்தில் யார் யார் அடுத்த தேர்தலில் போட்டியிடுவர் யார் யார் விடுவர் என்பது பற்றி ஆலோசிக்கப்பட்டது. பொதுத் தேர்தல் நெருங்குகின்றதென்பதற்கு இது ஓர் அறிகுறியாகக் கருதப்படுகின்றது.

லினையே திண்பால் நமக்கொன்றுகண்டோம், என்று சொலலிப் போந்ததை சைவ அன்பர்கள் நன்கு தெளிதல் வேண்டும். எனவே புத்தாண்டில் நற்கதிபெறச் சிவாய நமவென்று நீறணிய அருளாய் என்று இறைவனை இறைஞ்சிநெஞ்சம் அவருக்கே யிடமாக வைத்து சலம்பூவொடு தூபம்கொண்டு தமிழோடிசைபாடல் மறவாதுநிற்கும் சைவநெறி கடைப் பிடித்தல் வேண்டும்.

அகில இலங்கைச் சைவ மாநாடும் திருமுறை விழாவும் புத்தாண்டிற் புத்துணர்ச்சியை நன்கு புலப்படுத்துமாறு அமைக்கப்பெற்றமையும் மன்மத ஆண்டுக்கு நல்வரவு கூறும் வகையிற் பொருந்தியுள்ளது.

# திருமுறை விழா

வேலணையில் சித்திரை 17 விருந்து (17-4-55) தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நடைபெறவிருக்குந் திருமுறை விழாவில் தமிழ் நாட்டிலிருந்தும் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் சைவத்தமிழறிஞர்கள் வந்து கலந்து கொள்வர்கள்.

திருப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார், காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் திரு வச்சிரவேல் முதலியார், சென்னை கலைமகள் ஆசிரியர் திரு. கா. ஜகந்நாதன், சென்னை பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் திரு. ... தன முதலியோர் தமிழ் நாட்டிலிருந்து வருகின்றார்கள்.

தபால் தந்திப்பகுதி மந்திரி கௌரவ சு. நடேசபிள்ளை, திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, இலங்கைச் சர்வகலாசாலைத் தமிழ் விரிவுரையாளர் திரு. வி. செல்வநாயகம், முதலியார் செ. சின்னத்தம்பி, ஸ்ரீமதி R. R. நவரத்தினம் பரமேசுவரக்கல்லூரி ஆசிரியர் திரு. மு. ஞானப்பிரகாசம் முதலியோரும் இன்னும் பல அறிஞர்களும் விழாவிற் கலந்து விரிவுரை நிகழ்த்துவார்கள். தமிழ் நாட்டிலிருந்து சிறந்த ஓதுவார்கள் வந்து திருமுறை ஓதுவார்கள்.

விழா வேலணை மத்திய கல்லூரிமுன்றிலில் அமைக்கப்பெறும் பந்தரில் நடைபெறும். அபிமானிகள் தங்குவதற்குப் பிரத்தியேகமாக வசதிகள் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரதத்தின் மகிமை

## உயிருக்கும் உடலுக்கும் இன்பந் தரும் ஒப்பற்ற சஞ்சீவி

திரிகரண சுத்தியுடன் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்குவதற்கு ஆன்றோரால் ஏற்படுத்தப்பட்ட கட்டுப்பாடு விரதமாகும். இவ்விரதம் சீவாத்ம பரமாத்ம ஒற்றுமைக்கு மாத்திரமல்லாமல் உடம்புச் சுகத்திற்கும் வேண்டப்படுவதொன்று. மேற்கூறிய நன்மையைத் தரும் ஒப்பற்ற சஞ்சீவி விரதமொன்றே. ஏனைய மருந்துகள் உடம்பு நலம் ஒன்றிற்கே உதவும். உள்ளத்தைப் பொறுத்ததே உடம்புச் சுகம். உள்ளத்தைப் பண்படுத்துவதற்கு விரதம் பிரதானமாக வேண்டும். உடம்பி லிருக்கும் நோய்களைப் போக்குவதற்கு மருந்துகளைப் பாவிப்பதிலும் உண்ணாவிரத மிருந்து நீக்குவது சாலச் சிறந்ததாகும். பண்டைக் காலதில் இதன் உண்மையைத் தத்துவகிலையறிந்த பெரியோர் நோன்பிருந்து நோயை நீக்கினர். அடியார்கள் பட்டினியிருந்து ஆணவமல நீக்கத்திற்கு ஐம்புலன்களை அடக்கி வென்றனர். அதனால் ஆண்டவனைக் கண்டனர்; அருள் பெற்றனர் மகாத்மா காந்தியடிகள் போன்ற உத்தம புருஷர்கள் உண்ணா விரதத்தினால் உலகத்தை அசைத்து விட்டதை நாம் யாவரும் கண்கூடாகக்கண்டோம். இவர்கள் சாதிக்க முடியாத பல காரியங்களை இலகுவிற் சாதித்து வெற்றி பெற்றனர். இதனால் நெடுங்காலம் நோயற்று வாழலாமென்று நிரூபித்துக் காட்டினர்.

ஒவ்வொருவரும் விரதங்களின் தத்துவங்களையும் அதனால்உண்டாகும் நலன்களையும் நன்றாக உணர வேண்டும். இன்றைய மக்களை உற்று அவதானிக்கும்பொழுது விரதம் விரதமென்று எல்லோரும் விரதம் அனுட்டிக்கின்றனர். விரதத்தின் தத்துவங்களும் உண்மைகளும் அவர்களுக்கு அற்பமேனும் தெரியாது. எல்லோரும் விரதம் அனுட்டிக்கின்றனர், நாங்களும் அனுட்டிக்கிறோம் அனுட்டிக்கிறோம் என்ற நிலைமையி லிருக்கின்றனர். கடவுள் வணக்கம், ஒழுக்கம், சுகாதாரம், ஆகிய எல்லாவற்றையும் அடக்கியது விரதம். மாற்றக் கூடாத எத்தனையோ பெரும் நோய்கள் விரதங்களால் சுகமாகின்றன. விரதத்திற்கு அவ்வளவு சக்தியுண்டு. இவைகளை மக்கள் உணர்ந்து கடைப்பிடிக்கவேண்டும். எங்கள் தமிழ் முறைகளுள்ளே ஆன்மார்த்த உண்மைகளும், தத்துவங்களும் அநேகம் பொதிந்து ஆழமாகக் கிடக்கின்றன. விரதங்களை முறைப்படி அநுட்டிப்பவர்களே நற்பலனைப் பெற்றுய்யலாம்.

ஒவ்வொருவரும் விரதமனுட்டிக்கும்பொழுது நல்நோக்கத்துடனும், மகிழ்ச்சியுடனும், உற்சாகத்துடனும், மன நிறைவுடனும் அனுட்டிக்க வேண்டும்.

.... .... .... .... .... .... .... .... ....

செல்வி த. மாலோகமணி
காவேட்டி கிழக்கு

.... ... .... .... .... .... .... .... ....

இவைகளைக் கைக்கொள்ளாது அநுட்டிக்கும் விரதம்,

"முறைசெய்யான் பெற்ற
தலைமையும் நெஞ்சில்
நிறையிலான் கொண்ட தவமும்
— நிறையொழுக்கந்
தேற்றாதான் பெற்ற
வனப்பும் இம்மூன்றும்
ஆற்றின்கண் தூவிய வித்து'

என்றவாறுய் பலனற்றுப்போகும்.

ஆணவத்தை யறுப்பதற்கும், ஐம்புலனையடக்குவதற்கும், அழியா இன்பம் பெறுதற்கும் விரதம் ஒரு சாதனமாயுள்ளது. அப்படியிருக்கவும் விரதமிருப்போர் விரதமனுட்டிக்கும் காலங்களில்தான் அதிகங் கோபிப்பதும், வீண் பேச்சுக்கள் பேசுவதும் மக்களிடையே சர்வ சாதாரணமாய்க் காணக்கிடக்கின்றது. கடவுளை உணர்ந்து அவரை அடைவதற்கு ஊனுடம்புடைய இம்மானுடப் பிறவியே தக்க சாதனம், இந்தக் கிடைத்தற்கரிய இம்மனித உடலைப் பரிசுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். கடவுளையறிவதற்காகவே உடம்பைப் பேணிக் காக்கவேண்டும். உடம்பைப் பேணிப் பரிசுத்தமாக வைப்பதற்கு விரதங்கள் அனுட்டிக்க வேண்டும். அதனால்தான் உடம்பும், உளமும் ஒருசேரச் சுத்திகரிக்கப்படும். உடலினுள் இருப்பவனை உணரவே உடம்பை ஓம்புகின்றேன் என்ற பொருள்பட

"உடம்பினை முன்னம்
இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே
உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன்
கோயில் கொண்டான்
என்று உடம்பினை
யானிருந்து ஓம்புகின்றேன்"

என்று திருமூலர் கூறினர். இவ்வுண்மையை மனதில் வைத்து விரதங்கள் அனுட்டிக்கப்பெறுதல் வேண்டும். அப்பொழுது மேலே குறிப்பிட்ட நன்மைகள் எல்லாம் ஒருங்கே கிடைக்கும்.

### அரசாங்கமொழிபற்றி மந்திரி கன்னங்கரா

திருக்கோணமலையிற் கொடுக்கப்பட்ட விருந்துபசாரத்திலே மந்திரி ஸ்ரீ சி. டபிள்யு. டபிள்யு கன்னங்கரா அவர்கள் பேசும்போது இலங்கையின் அரசாங்க மொழிகளாய் சிங்களம் தமிழ் ஆகிய இரு மொழிகளுமிருக்குமென்பதே இப்பொழுதுள்ள தீர்மானம். இதில் எவ்விதமாற்றமும் நடக்கக்கூடுமென்று நான் நினைக்கவில்லை என்று கூறினாராம்.

### புத்தஜயந்தியில் அரசாங்கத் தொடர்புக்கு எதிர்ப்பு

நாவலப்பிட்டியைச் சேர்ந்த கினிகதேனையில் நடந்த புத்த குருமார் சங்கக் கூட்டத்திலே பேசும்போது புத்த ஜயந்திக்கும் அரசாங்கத்துக்கும் எவ்வித தொடர்பும் இருத்தல்கூடாது என்று நாவலப்பிட்டி வெலுவன் ஆராமயாவின் பிரதம புத்தகுரு ஸ்ரீ எம் யு ஸ்ரீகவிஸவர நாயக தேரோ கூறினாராம்.

### ஸ்ரீ மாணிக்கஇடைக்காடரின் மதிமொழி

—0—

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே போதிய வயல் நிலம் இன்மையாலும், நீர்ப் பாய்ச்சல் வசதி இன்மையாலும், கமத்தொழில் செய்வதில் எவ்வளவு திறமையுடையவனாயிருந்தபோதிலும், யாழ்ப்பாணக்கமக்காரன்முன்னேறமுடியாதென்பதை எடுத்துக்காட்டி, யானையிறவுக்கப்பாற் சென்று நீர்ப்பாய்தல் வசதியுள்ள வயல் நிலங்களைச் சம்பாதிக்க வேண்டுமென்று உரும்பராய் ஐக்கிய விவசாய உற்பத்தி விற்பனைச் சங்கத்திலே பேசும்போது ஸ்ரீ என். மாணிக்க இடைக்காடர் அவர்கள் யாழ்ப்பாண மக்களுக்குப் புத்தி புகட்டினர்.

### தமிழ் மொழியின்நிலைமைபற்றி அச்சம் ?

நாவலப்பிட்டி சென்ற் மேரி கல்லூரி தமிழ் இலக்கியச்சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்திலே கலாநிதி. ஸஸ். வித்தியானந்தன் அவர்கள் தலைமை வகித்துப்பேசும்போது, தமிழ் மொழியின் வீழ்ச்சிபற்றித் தமிழ் மக்கள் வருந்துகின்றனர்; அதற்கு அழிவு ஏற்படாமல் பாதுகாத்தற்கு கலாச்சாரச் சபைகள் அமைக்க வேண்டும் என்று கூறினர்.

### அழிக்கும் ஆற்றலில் மற்றொரு அதிசயம்

ஆகாயவிமானங்களிலிருந்தபடியே ஆகாயத்திற் பறக்கும் பிற விமானங்களில் அணுக்குண்டுப்பிரயோகஞ் செய்யத்தக்கதும் ஆகாயத்திற் பறக்கும் எந்த விமானத்திலும் நிலத்தில் நின்றே எறியக்கூடி... குண்டை... கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றதாம்.

# எங்கள் வாலிபர்களின் நிலைமை

## அரசாங்க அதிபரின் அரிய அறிவுரை

வடமாகாண அரசாங்க அதிபர் ஸ்ரீ ம. ஸ்ரீகந்தா அவர்கள் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவிலே எங்கள் வாலிபர்களின் கல்வி நிலைமை வாழ்க்கை நிலைமை ஆகியவை பற்றி அனுபவ ஆதாரமுள்ள அரிய அறிவுரை ஒன்றை நிகழ்த்தினார்.

அவர் பேசும்போது:

இராணைமடுத் திட்டத்தின் கீழ் காணிப்பங்கீடு கேட்ட 850 மாணவர்களை நான் நேர்முகப் பரிசிலனை செய்தபோது அவர்களது கல்வியின் பொதுத்தரம் மிகவும் குறைவாக இருப்பதைக் கண்டேன்".

"இம்மாணவர்களின் கவனம் முழுதும் அவர்களது பொதுக்கல்வியறிவை விருத்தி செய்வதிலும் பார்க்கப் பரீட்சைகளில் சித்தியடைவதிலேயே அதிகம் செலுத்தப்படுகிறது. இதற்குப் பதிலாக இன்றைய பண்டைய மாபெரும் உலகத் தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகளையும், சுய சரிதைகளையும்வாசிப்பீர்களேயானால் உங்கள் குணநிசயங்களும் பண்பாடும் வளர்ச்சி பெறும். உங்கள் பாடப் புத்தகக் கல்விக்கிடையில் அத்தகைய நூல்களை வாசிப்பதற்கு நேரம் ஒதுக்கி வைத்துக்கொள்ளுங்கள்.

தமிழ்மொழியும் சைவ சமயமும் பழம் பெருஞ் சிறப்புக்கள் வாய்ந்தவை. அவ்விரண்டையும் இந்தக் கல்லூரியில் ஒருங்கே பெறக்கூடியவர்களாயுள்ள நீங்கள் அதிர்ஷ்டசாலிகள், இந்நாட்டின் வட, தென் பகுதிகளுக்கிடையே பரஸ்பர மதிப்பும் ஒத்துழைப்பும் பெருகுவதற்கான அறிவை விருத்தி செய்யும் அடிப்படையாக இதைப் பயன் படுத்திக்கொள்வீர்களாக. உடற்பயிற்சிக் கல்வியும் முக்கியமான ஒன்றாகும். உடல் வலிமையில் உளவலிமை பெறவேண்டும்.

வாலிபர்கள் பெரும்பாலும் உயர்தரக் கல்வியிலே நாட்டம் கொள்கின்றனர். யாழ்ப்பாணத்து வாலியர்கள் கமத் தொழிலைப்பற்றிச் சிந்திப்பதில்லை. ஆனால் இப்போதைய நிலைமையில் கமத் தொழிலில் ஈடுபடுதலே பிரச்சினையைத் தீர்க்கும் ஒரே வழியாகும்என்று வற்புறுத்திக் கூறினர்".

# தென் ஆபிரிக்கா படிக்கவேண்டியது

தென்ஆபிரிக்காவில் உள்ள, தென் ஆபிரிக்க இந்திய மக்களைத் தென் ஆபிரிக்க அரசாங்கம் வல்நெஞ்சத்துடன் அடக்கியொடுக்கி வருவதுபற்றி அமெரிக்க, உருசிய அரசாங்கங்கள் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்த வேண்டும்.

அமெரிக்கஉருசியமுறைகளை ஆதரிப்போர் இந்தியா இங்கு மில்லை அங்குமில்லை என்று இந்நாட்டிற் பிரசாரஞ் செய்து கொடியேற்றுகின்றனர். இந்தியா இங்குமில்லை அங்குமில்லை; ஆனால் நாங்கள் சிறந்த நெறியில் முழுதாய் நிற்கின்றோம்.

ஆபிரிக்க இந்திய மக்களுக்குப் பணமிடுக்குக் கொண்ட தென் ஆபிரிக்க வெள்ளை அரசாங்கம் செய்யும் வெளிப்படையான நிறவெறிக் கொடுமைகள்பற்றி உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டாரும் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துமபடி அழைக்கின்றேன். பொதுவுடைமை எதிர்ப்பு என்ற பெயரிலோ பொதுவுடைமை என்ற பெயரிலோ செய்யப்படும் நிறவெறிக் கொடுமையைச் சகிக்க இந்தியா ஆயத்தமாயில்லை. பொதுவுடைமை பொதுவுடைமை எதிர்ப்பு என்பனவற்றைமறந்து சிறந்த முறை எது என்பதுபற்றிச்சிறிது தென் ஆபிக்கா படிக்கவேண்டுமென்று பண்டிதநேரு அவர்கள் தெல்கிமாநகரிலே பேசும்போது கூறினர்.

### பதவி நிறுத்தங்கள்

பாராளுமன்றக் கூட்டங்களுக்கு ஒருகிழமைக்குப் போகக்கூடாதென்று வவுனியாப் பிரதிநிதி ஸ்ரீ சி. சுந்தரலிங்கம் நிற்பாட்டப்பட்டிருக்கின்றார். காரணம் ஒழுங்குக்கு அமையாமை.

x x x

யாழ்ப்பாண நகரசபைக் காரியாதிகாரி ஸ்ரீ கா. சண்முகம் காரியாதிகாரி பதவியிலிருந்து நகரசபைத் தலைவரால் நிற்பாட்டப்பட்டிருக்கின்றார். காரணம் ஆணைக்கமையாமை ஒத்துழையாமை முதலியன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளர்பரம்

இல. 1 Miscellaneous

நீக்கிலாப்பிள்ளை அந்தோனிப் பிள்ளை கைம்பெண் மாத்தா மக்டலோன் அல்விறட்டு.

நெ 32, சொன்வன்ற ரோட்டு இரண்டாம்வட்டாரம் யாட்பாணம், பெற்றிஷகாறி.

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் 1 Mis. ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1955 ௵ வைகாசி௴ 14-ந் உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

யாட்பாணம் கரையூரில் கொத்தன் அல்லது கவிரியல் வளவு என்னும் காணி நி இ. (1) ஒன்றும் அதற்கு சேர்ந்தவைகளும். எல்லை: கிழக்கும், தெற்கும் ரோட்டு, வடக்கு, பிலிப்பு சவிரிமுத்துவின் ஆதனம் மேற்கு, கறலினே கவிரியல் பிள்ளை பெண். இதில் சொரியலாக ½ பங்கு.

வ. அ. துரையப்பா.
கொமிஷனர்.

யாட்பாணம்,
29-3-55
M. 22 8.4

## எல்லை கடந்து விட்டதா மாணவர் ஒழுங்கீனம்?

கொழும்பு புளுமன்டோல் வீதியிலுள்ள அரசாங்க பாடசாலையில் ஸ்ரீ டபிள்யு. ஏ. டி. சில்வா அவர்களின் நினைவு நாட்கூட்டம் ஸ்ரீ டட்லி. சேனநாயகதலைமையில் (31-3-55) வியாழக்கிழமை நடந்தது. பல தலைவர்கள் புகழுரைகள் பேசினார்கள். ஆனல் அவற்றை அப் பாடசாலை மாணவர் குழப்பிக்கொண்டிருந்தார்கள். ஸ்ரீடட்லி சேனநாயக ஒழுங்காயிருக்கும்படி பன்முறை கேட்டும் மாணவர் செவிசாய்க்கவில்லை. நிலைமையைப் பார்த்துவிட்டு ஸ்ரீ சேனநாயக கூட்டம் நடத்த முடியாமல் வெளியே செல்ல வேண்டியதாயிற்று.

## சமய போதனை

### சேர். க. வைத்தியநாதனின் புகழுரை

மாத்தளை பாக்கிய வித்தியாலயத்திலே பௌத்தம், கிறிஸ்துவம், சைவம் ஆகிய மூன்று சமய போதனையும் செய்யப் பெறுகின்றதாம். இப்பாடசாலைப் பரிசளிப்பு விழாவிற் பேசிய சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் பேசும்போது இக்ஓர் இந்துக்கல் விநிலையமாயிருந்தபோதிலும் பௌத்தம், கிறிஸ்துவம், சைவம் ஆகிய மூன்று மதங்கள்பற்றியும்போதிப்பதுபற்றிமகிழ்ச்சியடைகிறேன். இப்பாடசாலையின் முறையைப் பின்பற்றத்தக்கவாறு கல்வித் திட்டத்தை அமைக்குமாறு மந்திரி சபையைக் கேட்கப்போகிறேன். நாட்டின் முன்னேற்றத்துக்கு ஐக்கியம் வேண்டும். இதற்கு மதமுரண்பாடுகள் முட்டுக்கட்டைகளாயிருக்கின்றன என்று கூறினர்.

## வீடு விலைக்கிருக்கின்றது

நாலு அறைகளும் இரண்டு மண்டபங்களுமுள்ள விசாலமான வீடு. மின்சார வெளிச்சம் தென்னைகளும் நல்ல மாமரங்களும். நிலம் நாலு பரப்பளவில். கச்சேரிக்கும் உள்நாட்டு அரசாங்க நிலையத்துக்கும் அருகிலும் சஞ்சுவான் கல்லூரி (St. Johns College) க்கும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கும் கிட்டவும் உள்ளது. மாதம் ரூபா எழுபது வருமானமுள்ளது. விலை ரூபா 25000/= அல்லது கிட்டிய தொகை.

விபரங்களுக்கு அரசாங்க வழக்கறிஞர் வண்ணார்பண்ணை ஸ்ரீ C. C. சோமசேகரம் அவர்களுக்கு அல்லது, ஸ்ரீ சாம் ரீ சொலமன்ஸ் மூன்றும் நம்பர் கண்டிரோட் சுண்டிக்குளி என்ற விலாசத்துக்கு எழுதவம்.

M 18, 1, 8-4-55

## இலங்கை - இந்தியர் நிலைமை?

—0—

இந்திய உலகசபையிலே இலங்கை இந்திய நிலைமை பற்றி பண்டித நேரு அவர்கள் பேசும்போது தமது நம்பிக்கை பழுதுபட்டுப் போவதாகக் குறிப்பிட்டார். இலங்கையின் இடைஞ்சல்களை விளங்கி நீக்கும் முறையில் இந்தியா பொறுமையாயிருந்ததென்றும் ஒத்துழைத்ததென்றும் அவர் எடுத்துக் காட்டினர். இலங்கை இந்திய உடன்படிக்கை எவ்வாறு கையாளப் படுகின்றதென்பதை விளக்குதற்குச் சில புள்ளிவிபரங்களைக் காட்டினர். அவற்றின்படி 1953-54ல் 7 505 பேர் இலங்கைப் பிரசைகளாகப் பதிவு செய்யப்பட்டனர். மறுக்கப்பட்டோர் தொகை45,236 1954-55ல் 21 பேர் ஏற்கப்பட்டனர். 36,216 பேர் மறுக்கப்பட்டனர். இவை இப்படியிருக்க இந்திய தூதுவர் 1954ல் 5,600 பேரை இந்திய பிரசைகளாகப் பதிவு செய்தார். 4,400 பேர் தீர்மானிக்கப்படவிருக்கின்றனர். இற்றைவரையில் ஒருவராயினும் மறுக்கப்படவில்லை. என்று விளக்கினர். சபையிலிருந்தோர் யாவருடைய மனமும்பழுது பட்டபோதிலும்பொறுமை சாதிக்கும்படி அவரால் புத்தி புகட்டப்பட்டனர்.

## இந்திய பேராசிரியர்கள்

———

ஏனையோரைப் போலவே இலங்கைக் கல்லூரிகளிற் கல்வி பயிற்றும் இந்திய பேராசிரியர்களையும் அவர்களுடைய இலங்கை வாச அனுமதிக்காலம் முடிந்தவுடன் இந்தியாவுக்குப் போகச் செய்யும் திட்டமொன்றை இலங்கை அரசாங்கம் அமைத்திருக்கின்றதாம். கல்லூரி அதிபர்கள் அதைஎதிர்க்கிறார்கள். அவர்களுள்ளும் யாழ்ப்பாணப்பகுதிக் கல்லூரிகளின் அதிபர்களே விசேடமாக எதிர்க்கிறார்கள். கல்லூரி அதிபர்களுடனே கலந்து ஆலோசித்த பின்னரே வித்தியா பகுதியார் வேண்டிய தீர்மானஞ் செய்வார்களென்று கூறப்படுகிறது.

## அணு சக்தி அலுவலிலும் முன்னேற்றமாதாலும்

இந்திய இராச்சிய சபையிலே பண்டிதநேரு அவர்கள் பேசும்போது அணு சக்தி ஆராய்ச்சித்துறையில் இரகசியமாக வைத்திருக்கப்படாத காரியங்களில் பிறநாடுகளைக் கேட்டறிய வேண்டிய நிலைமைக்கு மேலே இந்தியா போய்விட்டதென்றும் இனி அறியவேண்டியவை ஏனைய நாடுகள் இரகசியமாக வைத்திருக்கும காரியங்கள் மாத்திரம்தான் என்றும் இவ்வாறு இந்தியா இத்துறையிலும் முன்னேறியிருக்கின்றதென்றும் இந்தியாவுக்கு வந்திருந்த அமெரிக்க அணுசக்தி விஞ்ஞானி ஒருவர் இந் நிலைமையைப் பார்த்துத் திருத்திப்பட்டாரென்றும் கூறினர்.

## இராசகோபாலாச்சாரியரின் வேடிக்கையான முறையீடு

சென்னைச் சட்ட சபை அலுவலகத்தில் செயலாளராகச் சேவைசெய்து ஓய்வு பெறும் திரு ஆர். வி. கிருஷ்ணஐயர் என்பவருக்கு சட்டசபைத் தலைவர் பிரிவு பசார விருந்தொன்றை நடத்தினர். ஸ்ரீ இராசகோபாலாச்சாரியரும் இவ் விருந்திற் சமுகமளித்திருந்தார். ஸ்ரீ இராசகோபாலாச்சாரியார் அவர்கள் பேசும்போது "நான் பதவியிலிருந்து வெளியேறிச் சென்றபோது எனக்குமட்டும் எவரும் விருந்தளிக்கவுமில்லை, நினைவு மலர் வெளியிடவுமில்லை" என்று வேடிக்கையாக முறையீடு செய்தார்.

பக்கத்திலிருந்த முதல் அமைச்சர் ஸ்ரீ காமராசர் துள்ளி எழுந்து "நான் தருகிறேன்" என்று முறையீட்டுக்கு மறுமொழி கூறினர். அப்படித் தருவீர்களென்று அறிந்திருந்தால் நான் இந்தமுறையீட்டைச் செய்திருக்கமாட்டேன்' என்று இராசகோபாலாச்சாரியார் உடனே பதிலளித்தார்.

## திருமுறை விழாவுக்குக் குன்றக்குடி அடிகள்

இந்தமாசம் 17, 18 19ம் திகதிகளில் வேலணையில் நடக்க இருக்கும் திருமுறை விழாவை குன்றக்குடி மகா சந்நிதானம் திருப்பெருந் திரு அருணாசலதேசிகபரமாசாரிய சுவாமிகள் தொடக்கி வைப்பாரென்று அறிய வருகின்றது.

## அரசாங்க சேவை வேதன உயர்வு

———

அரசாங்க சேவையிலுள்ளோருக்கு வேதனம் உடனே கூட்டப்படுமென்றும் அதற்கு மூன்று கோடி ரூபாவரையில் தேவையாகுமென்றும் செய்தி வெளிவந்திருக்கின்றது.

## வண்ணை, நோய்பயன் மணல்
# மயான பரிபாலன சபை

மேற்படி சபையின் 22 வது ஆண்டு விழா 19-3-55 சனிக்கிழமை 5-30 மணியளவில் நீர்வாவியடி "நாவலர்மண்டபத்தில்" நடைபெற்றது. திரு. இ சிவகுருநாதர். எம் பி ஈ, அவர்கள் தலைமை வகித்தார். பின்வரும் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டனர்:—

தலைவர்: திரு. இ. சிவகுருநாதர். எம். பி. ஈ.
உப தலைவர்கள்: (1) ,, C.C. சோமசேகரம் (முடிக்குரியநியாயவாதி)
(2) முகாந்திரம்: E. P. இராசையா
(3) திரு. ச. நடராசா
காரியதரிசி: ,, S. P. இராசையா
உப காரியதரிசி: ,, R இரங்கநாதன்
தனாதிகாரி: ,, P. தம்பு
உப தனாதிகாரி: ,, S K பாலசுப்பிரமணியம்
கணக்குப் பரிசோதகர்: ,, S P. கந்தையா

திருவாகசபை அங்கத்தவர்கள்:—

திருவாளர்கள்: (1 T. S. துரைராசா J. P., (2) R. C, மன்மதராயன், (3 T. இராமலிங்கம் (வைத்தியர்) (4) S P. செல்லையா, (5) V. வயிரமுத்து, (6) V உமாபதி, (7) A S. மயில்வாகனம், (8) V. கந்தையாப் பத்தர், (9) T, தருமலிங்கம் வைத்தியர், (10) வே. வல்லிபுரம். (11) T. நாராயணசிங்கம், (12) வி செல்லையா, (13) R. இராமசாமி, (14) M மயில்வாகனம், (15 K. சின்னத்துரை, (16) A. சம்பிப்பிள்ளை, (17) S S. நவரெத்தினம் (M. M C). (18) M. கார்த்திகேயன் (M M C.), (19) முதலியார் C. முத்துத்தம்பி (M M C) 20) S சிற்றம்பலம்.

கீழ்க்கண்ட முக்கியமான தீர்மானங்கள்:-

**முதலாவது:**

சுடலையில் தீர்க்கப்படவேண்டிய சாவீட்டுச் சம்பளம் பின்வருமாறு:

| | | ரூ ச |
|---|---|---|
| 1. | நாவிதன் ... ... | 2 50 |
| 2. | கட்டாடி ... ... | 2 50 |
| 3. | குடிப்பறை (1மேளம், 1தம்பட்டம் ஆக இருவர்) | 2 15 |
| 4. | ஒரு கூட்டம் (மேளம் 2. தம்பட்டம் 2, சல்லாரி 1, மேற்படி குடிப்பறை இரண்டும், மேற்கொண்டு மூன்றுமாக 5 பேர்) | 9 65 |
| 5 | சுடலைப்பணம் (டாப்பு) ... | 75 |
| 6. | கட்டை குத்தி அடுக்க ... | 4 00 |
| 7. | கட்டுப்பாடை ... ... | 1 00 |
| 8. | மிருகங்கள் புதைத்தல்: | |
| | குதிரை ... | 2 00 |
| | மாடு ... | 1 00 |
| | ஆடு, கன்று, முதலியன | 50 |
| 9, | பாடை வண்டி (வாடகை) ... | 5 00 |

**இரண்டாவது:**

அதிக செலவில் செய்யப்பட்ட பாடை வண்டில் பொதுமக்களின் வசதிக்காக வாடகைக்கு விடப்படும். கட்டணம் ரூ. 5·00.

மேற்படி வண்டிலைப் பாவிப்புக்கு எடுப்பவர்கள் சபையாரால் ஒவ்வொரு குறிச்சிக்கும் நியமிக்கப்பட்டவர்களில் ஒருவரிடம் மயானக் காவற்காறனுக்கு ஓர் கடிதமும் ரூபா ஐந்தும் அனுப்பி வண்டிலைப் பெற்றுக்கொள்ளலாம்.

கோக்குவில் மேற்குக்கு: (1) திரு வேலுப்பிள்ளை வல்லிபுரம்
(2) ,, த குமாரசாமிப்பிள்ளை
(3) ,, V. செல்லையா
சிப்பித்தறைக்கு: திரு. ஏ எஸ் மயில்வாகனம், புது ரோட்டு
வண். வட மேற்குக்கு: ,, ரீ எஸ் துரைராசா, ஐயனார்கோவிலடி,
வண் தென்மேற்குக்கு: ,, ச நடராசா. ஒட்டுமடம் [யாளி
வண் வடகிழக்குக்கு: (1) ,, எம். எம் கார்த்திகேசன் ஆசிரியர் தலை
(2) ,, பீ எஸ் ஏ பொன்னுத்துரை கலட்டி,
(3) ,, த இராமலிங்கம், வைத்தியர் பிறவுண் ரோட்டு.
(4) முகாந்திரம் ஈ. பி. இராசையா, செம்மணி ரோட்டு.
வண். தென்கிழக்குக்கு: (1) திரு எஸ். எஸ். நவரெத்தினம், கந்தர்மடம்.
(2) ,, வே. உமாபதி. கந்தர்மடம்.
(3 ,, த. தருமலிங்கம், வைத்தியர் ஆனைப்பந்தியடி,
(4) ,, C. C. சோமசேகரம், முடிக்குரிய நியாயவாதி, நாவலர் ரோட்டு.
(5) ,, எஸ். பி. செல்லையா, பெருமான் கோவிலடி.

**குறிப்பு:**

(1) பாடை வண்டிலைப் பாவிக்க கட்டணம் கொடுக்க வசதியில்லாத வறியவர்கள் மேற்படி மயானசபைத் தலைவர், உப தலைவர்கள் தனாதிகாரி என்பவரில் எவரேனும் ஒருவரின் சிபார்சு செய்த கடிதம் காரியதரிசிக்கு அனுப்பினால் இலவசமாக வண்டி கொடுக்கப்படும்.

(2) ஒரே ஒரு வண்டில் தற்சமயம் இருப்பதால் காவல்காறனுக்கு முதல் கொடுபட்ட கடிதத்துக்கு வண்டில் கொடுக்கப்படும்.

S. P. இராசையா
கௌரவ காரியதரிசி.

31—3—55
M. 21 8-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண அழைப்பு

## வைத்தியநாதக்குருக்கள் — பவானிஅம்மா

ஊரெழு சிவஸ்ரீ ச. பாலசுந்தரக் குருக்கள் அவர்களின் சிரேஷ்ட புத்திரன் பிரம்மஸ்ரீ வைத்தியநாதக் குருக்களுக்கும் பிரம்மஸ்ரீ ர. பத்மநாதசர்மா அவர்களின் சிரேஷ்ட புத்திரி ஸ்ரீமதி பவானி அம்மாவுக்கும் மன்மத வருஷம் சித்திரை மாதம் 12-ந் திகதி (25—4—55) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் வரும் சுப முகூர்த்தத்திலே ஊரெழுவிலுள்ள மணமகன் இல்லத்தில் சமயாசார முறைப்படி மாங்கல்யதாரணம் செய்ய திருவருளை முன்னிட்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் இஷ்டமித்திர குடும்ப சமேதராய் வந்து தம்பதிகளை ஆசீர்வதிக்கும்படி மிக்க அன்புடன் வேண்டிக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்
சிவஸ்ரீ ச. பாலசுந்தரக் குருக்கள்

ஊரெழு
6—4—55

M 237 8, 22-4

# நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

## மத நிந்தனை எனது கட்சிக் கொள்கையல்ல

பங்குனி மீ 12-ம் திகதி வெளியான உங்கள் மதிப்புக்குரிய வார இதழில் "கேள்வி முறையில்லையா" என்ற தலைப்பின்கீழ் பிரசுரிக்கப்பட்டிருந்த மாணுக்கன் எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த பொதுவுடைமைப் பிரசாரகர் நான்தான்.

உண்மை விளம்பும் 'மாணுக்கன்' எழுதிய குற்றச் சாட்டுக்கள் அத்தனையும் உண்மைக்குப் புறம்பானவை. மத நிந்தனை எனது கட்சிக் கொள்கையுமல்ல. அத்தகைய நிந்தனையை நான்பண்டைத்தரிப்பு சைவ வித்தியாசாலையிலோ அல்லது வேறு இடத்திலோ என்றேனும் செய்ததுமில்லை.

ஆறுமுக நாவலரையும் அவர் அன்னியர்களிடமிருந்து, எங்கள் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் காப்பாற்ற எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் பாராட்டி, பாரதியின்நோக்கங்களுடன் ஒப்பிட்டேன். பேய், பிசாசு மூடநம்பிக்கைகள் என்பனவற்றுக்குப் பாரதி கூறியதையும் எடுத்துக் காட்டினேன்.

யாரோ ஒரு அநாமதேயப்பேர்வழி எழுதிய கடிதத்தை எடுத்து அதற்கு விசேஷ முக்கியத்துவம் கொடுத்து ஆதாரமற்ற பழியை ஒருவர்மீது சுமத்த உங்கள் பத்திரிகை பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டதையிட்டுக் கவலைப்படாமல் இருக்க முடியவில்லை.

உண்மையை எடுத்து உரைக்க எனக்கும் ஒரு வாய்ப்பளிக்கும் முறையில் இக் கடிதத்தைப் பிரசுரிக்கும்படி தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

இங்ஙனம்
தங்கள் உண்மையுள்ள
வ. பொன்னம்பலம்

*  *  *

[குறிப்பிட்ட கூட்டத்திலே சொற்பெருக்கியதையும், அவ்வமையம் "கேள்வி முறை இல்லையா....? என்று 'மாணுக்கன்' நேயர் நெஞ்சத்திலே கூறிய வண்ணம பேசவில்லையென்பதையும திரு. வ. பொன்னம்பலம் அவர்கள் பொறுப் புணர்ச்சியுடன் இந்துசாதனத்திற்கு உறுதிமொழியாய் எழுதியிருப்பதை நாம் பாராட்டுகின்றேம். எனினும் செய்தித் தாள்களிலே கடிதங்கள் வெளிவரும் முறையை நன்கறியாத திரு. பொன்னம்பலம் அவர்கள் இப் பத்திரிகை பொறுப்பற்றவகையில் நடந்து கொண்டது எனக்குறிப்பிட்டதை அவர் இன்னமும் பன்முறை ஆய்ந்துணர்ந்து கொள்வார் என்று நம்புகின்றேம்.

கோயில்கள் மதக்கொள்கைகள், வழிபாட்டு முறைகள் ஆகியனபற்றி அரசியற் கட்சியினர் சொற்பெருக்கும் பொழுதெல்லாம் மக்கள் உள்ளத்தை இறைநெறியினின்றும் பிறழக்கூடிய வகையில் எடுத்துரைக்கின்றார்கள் எனப் பன்முறை எமக்கு நேயர்கள் அறிவித்திருக்கின்றார்கள். 'பேய் பிசாசு, மூட நம்பிக்கைகள்' என்பனவற்றைப்பற்றிக் குறிப்பிட்டேன் என்று திரு. பொன்னம்பலம் அவர்கள் கூறும்பொழுதே குறித்த சொற்பொழிவின் நோக்கம் எல்லை முதலியன விளங்கக் கிடக்கின்றன. யாழ்ப்பாண நாட்டிலே 'பேய் பிசாசு மூடநம்பிக்கைகள்' இல்லாதொழிந்து போய் வரும் வேளையிலே திரு. பொன்னம்பலம் அவர்கள் அப் பொருள்பற்றி ஆராய்ச்சிசெய்தல் இன்றியமையாததாகத் தோன்றவில்லை!

திரு. அண்ணாதுரை, திரு. இராமசாமி நாய்க்கர் முதலிய அரசியல் வாதிகள் இவ்விதப் பேச்சுகளை மறக்காது ஒப்புக்கொண்டுவரவும் திரு. பொன்னம்பலம் அவர்கள் அவ்வாறு ஒன்றும் தன் எண்ணத்திலும் இல்லை [illegible]]

— ஆசிரியர்

# கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 10835

சுப்பிரமணியம் பொன்னையா சிவியாதெரு: வழக்காளி,

எதிர்

1. மூத்தது மாணிக்கம்
2. பெண் ராசம்மா
3. கா. அரியகுட்டியும் பெண் தெய்வானை, எல்லாரும் சிவியாதெரு. எதிராளிகள்

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் 10835-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1955 ஷு வைகாசிமீ 21 உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்த அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணிவிபரம்

(1) யாட்பாணம் சிவியா தெருவில் பெரிய மொட்டை வளவு என்னும் காணி நி. இ 2 11/16 வீடும் குசினியும் தென்னமரங்களும் மற்றும் பயிர்களும், இதற்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும் தூர்வையும், வழிவாய்க்கால் உரித்தும். எல்லை: கிழக்கு, ஒழுங்கை. வடக்கு, முருகன் சிதம்பரியின் ஆதனம், தம்பன் பெண் வள்ளியும். மேற்கு, கை ஒழுங்கையும் ஆறுமுகத்தான் பெண் அன்னமுத்து தெற்கு, கந்தன் இளையவன் மறவும்.

2 யாட்பாணம் சிவியா தெருவில் வெட்டுக்குளத்து வளவு என்னும காணி நி. இ. 2, குளி $2\frac{1}{2}$ தென்னமரங்களும் மற்றும் வானபயிர் செய்பயிர்களும் மேற்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும், வழிவாய்க்கால் தூர்வை நாலுமூளமுள்ளது. பாவிப்பு உருத்தும். எல்லை: கிழக்கு, சின்னத்தம்பியும் பக்காளரும், வடக்கு, நாகலிங்கம் பெண் பாக்கியம் மேற்கு, வல்லி ஏரம்புவும் பெண் பரமேசுவரி தெற்கு, ஒழுங்கை.

வ. அ. துரையப்பா.
கொமிஷனர்.

யாட்பாணம், 3-4-55
M. 23 8-4

## காரைக்காலம்மையார் குருபூசை

நாள்: ஜய ஷு பங்குனி மீ உள உ (9—4—55) சனிக்கிழமை.

இடம்: சைவபரிபாலனசபை சைவாச்சிரம நாவலர் மண்டபம்.

நிகழ்ச்சிகள்

இரவு $6\frac{1}{2}$ — 7. கடவுள் ஆராதனை, காரைக்காலம்மையார் பூசை.

7—$7\frac{1}{2}$ தமிழ்மறையோதல்

$7\frac{1}{2}$ "காரைக்காலம்மையார்" என்னும் பொருள்பற்றிப் பிரசங்கம்.

பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்கள்

சைவப்பிரசாரகர்

திரு. த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள்.

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்
சைவபரிபாலனசபை
யாழ்ப்பாணம், 5-4-55.

## திருநாவுக்கரசு நாயனர் குருபூசை

நாள்: மன்மத ஷு சித்திரை மீ ரு உ (18-4-55) திங்கட்கிழமை.

இடம்: சைவபரிபாலனசபை சைவாச்சிரம நாவலர் மண்டபம்.

நிகழ்ச்சிகள்

முற்பகல் 9 பிற்பகல் 1. கடவுளாராதனை, திருநாவுக்கரசுநாயனர்பூசை, நாயனர் சரித்திரம் படித்தல், தமிழ் மறையோதல், மாகேசுரபூசை.

இரவு $6\frac{1}{2}$ — 7 தமிழ்மறையோதல், திரு. V. சுப்பையும் அவரது கோஷ்டியாரும்.

7 — 8 பிரசங்கம்:

சைவப்பிரசாரகர்:

திரு. வே. சோமசுந்தரம் அவர்கள்

சைவாபிமானிகள் சமுகமளிப்பார்களாக

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம், 5—4—55,

உ

### அகில இலங்கைச்

# சைவமகாநாடு

"சைவசமயமே சமயஞ் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளி காட்டுமிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந் துழலுஞ் சமயநெறி புகுதவேண்டா முத்திதருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாரும் செகத்தீரே"

— தாயுமானவர்,

எல்லாம்வல்ல இறைவன் திருவருளை முன்னிட்டு, யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையார்வருகிற சித்திரை மாதம் 8-ம், 9-ம், 10-ம், 11-ம் (21, 22, 23, 24-4-55) தேதிகளாகிய நான்கு தினங்களிலும், இச் சபை ஆசிரம நாவலர்மண்டபத்தில், அகிலஇலங்கைச் சைவமகாநாட்டைச் சிறந்த முறையில் நடாத்த உத்தேசித்திருக்கின்றார்கள். இங்குள்ள கற்றூர் பெரியார்களுடன் தென் இந்தியாவிலிருந்தும் சில அறிஞரை அழைத்துச் சைவ சமய சம்பந்தமான பிரசங்கங்களைச் செய்விக்கவேண்டுமென்பதே இச் சபையார் கொண்ட பெருநோக்கமாகும். அகில இலங்கையிலும் வாழும சைவாபிமானம் பூண்ட மக்களனைவரும, இம் மகாநாடு அநுகூலமாக நிறைவேறும் வண்ணம் பல்லாற்ருனும் உதவிபுரிவார்களாக.

வண்ணார்பண்ணை,
8—3—1955.

ஆ. தனபாலசிங்கம்
ம. வே. திருஞானசம்பந்தன்
இணைக்காரியதரிசிகள்.


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஷு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும், முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
மனேஜர்.

Std. 14 20-11-46—20-11-49.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தர காண்டம் என்று மகுடஞ் சூட்டியது ஏன்?

1-ம் பக்கத் தொடர்ச்சி


அதன் மகா செளந்தரியத்தைத் தான் கண்டு, இராமன் காணவில்லையே என்று மனம் நோவதாகக் கம்பன் கூறும் பாட்டில் இக் கருத்து உட்பொதிந்து தோன்றுகின்றது. "இராமாயணம் சிறைபிருந்தாள் ஏற்றம்கூறும்" என்ற வைணவ வியாக்கியான கர்த்தாவும் சீதையின் பெருந்த புகழுக்கும் இக் காண்டத்தின் சிறப்புக்குமே சான்று கின்றார். அனுமனுக்குச் சுந்தரனென்று பெயருண்டு அவன் முக்கியனாக நின்று நிகழ்த்தும் காண்டமாதலால் இது சுந்தர காண்டமானது என்றும் ஒரு சாரார் கூறுவர். இதைப் போலவே "மற்றைப் பகுதிகளினும் செளந்தரியம் பெரிதும் மிகுந்து செறிந்திருக்கிறதாகையினால் சுந்தரகாண்டமாயிற்று" என்ற பிறிதோர் காரணத்தைப் பிறிதோர் சாரார் மொத்தமாகக் கூறிவிடுகின்றனர். வட்டத்திற்கு நடுப் புள்ளி போல் இராமாவதாரத்தின் காரணம் சுந்தரகாண்டத்தில் தான் இருககிறது என்ற பேருண்மையை நேரடியாக விளக்குவதாக இருக்கவேண்டும் இப் பெயருக்குக் கூறுகின்ற காரணம். "காவியத்தின் பாவிகம் முற்றிலும் மலர்ந்து முழுமணம் பரப்புவது இக் காண்டத்திலேதான்" என்னும் உட்கிடக்கையினாலேயே இரண்டு மகா கவிகளும் இவ்வாறு பெயரிட்டனர் என்று கூறினால் இதுவரை கூறிய காரணங்களும் இக்கூற்றின் சிற்றங்கங்களாக அமைந்து உள்ளடங்கிப்போகும். 'சீதையின் சிறைப்பாடு' இராமாயணக்கதையானது போல் 'ஹெலனின்' சிறைப்பாடு 'இலியாது'ஆகியது. ஹோமரின் அந்த மகா காவியத்தின் சூத்திரப் பொருள் தெளியும் மேல்நாட்டு விமர்சகர்கள் இவ்வாறே தெளிந்துரைப்பர். காவியத்தை அலங்கரிக்கும் பொதுவான குணம் ஒன்று அவசியம் இருக்கவேண்டும். அதைக் காவியத்தின் அழகையெல்லாம் விளக்கும் மூல செளந்தரியம் என்று கூறுவதில் யாருக்கும் ஆட்சேபனை இருக்க முடியாது. அந்த செளந்தரியத்தை அலங்கார நூலார் 'பாவிகம்' என்று கூறுகின்றனர். பாவிகத்தைக் காவியத்தின் முழுமுதல் அலங்கார குணமாகக் கொள்வது என்ற முறைப்படி 'சுந்தர காண்டம்' என்ற பெயர் இதே காரணத்தைப் பொருத்தமாக ஏற்றுச்சிறக்கின்றது.

சுந்தரம் என்றால் 'மங்களகரமான அழகு' என்று பொருள். காண்டம் என்பதற்குச் சேர்க்கை இயைபு, கூட்டம், தொகுதி என்பன பொருள்கள். பாவிகத் தன்மை பொதிந்திருப்பதனால் "கடலைத் தாவிக் கற்பின் செல்வியைக் கண்டு கணையாழி கொடுத்தபின் மீண்டு திருவடியைத் தொழுகின்றவரை" இக் காண்டமெங்கும் இடையறவின்றிச் செளந்தரியம் பின்னிக் கிடக்க வேண்டும். காண்டமென்பதற்குச் செய்யுட்களின் கூட்டம் என்று மட்டும் பொருள்பெற்று அமைந்துவிடுவோமானால் மேற்கூறிய நயத்திற்கு இடமின்றிப் போகும். "கடல் தாவும் எழுவாய் தொடங்கித் திருவடி தொழும் இறுவாய் காறும் அழகு அணு அணுவாகச் செறிந்திருக்கிறது சுந்தர காண்டம்" என்பதை யாவரும ஒப்புக் கொள்வர். அப்படி ஒப்புக்கொள்ளவேண்டுமானால் அதனை வலியுறுத்தி வகை செய்து காட்டத் தகுந்தவாறு இக்காண்டத்தின் பெயர்ப் பொருள் இருக்க வேண்டும் எனபது இன்றியமையாதது. கம்பனைப் பொறுத்தமட்டில் சுந்தர காண்டத்தின் பதினைந்து படலங்களையும் முழுக்க முழுக்கப் பதினைந்து அழகுக் களஞ்சியமாகவே கட்டியிருக்கிறான். செளந்தரியக் கலையின் அதியற்புதமான நுண்ணிய வேலைப்பாடுகளைக் கவிச் சக்ரவர்த்தியின் இக் காண்டத்தில் ஆதியிலிருந்து அந்தம் வரை அணிபெறச் சமைந்திருப்பதைக் காணலாம். இனவொரு நயம் என்னவென்றால மூந்தின காண்டத்தில் உற்பத்தியும் வருகின்ற காண்டத்தில் சங்கமமும் பின்னிக் கிடக்குமாறு தோன்றும் ஓர் எழில் நதிபோன்ற இயற்கையான சந்தாப்ப அமைதியும் இக் காண்டத்திற்கு இருக்கிறது. இவைகளை யெல்லாம் கம்பன் கவிதைத் துணைகொண்டு சுருங்கிய அளவில் விபர்சித்துக் காட்டுவதே இத் தொடரின் நோக்கம்.

* * * [வளரும்]

## கச்சேரிகளிலும் காசு மோசமா?

கிராம முன்னேற்றத்துக்கென ஒதுக்கப்பட்ட காசில் மோசம நடந்து வருவதாகக் கருதப்பட்டு, கொழும்பு, குருணாக்கல், களுத்துறைக் கச்சேரிகளில் விசாரணைகள் நடத்துகின்றனவாம். மக்கள் உதவி கேட்கும்பொழுது அத்துறையிற் சபபந்தப்படும் உத்தியோகத்தர் மக்களிடம் காசு உதவி கேட்கின்றனர் என்று மற்றொரு செய்தியும் இக்தடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.




வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

## உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இருவாரப் பலன்கள், 10—4—55 —— 23—4—55

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

நீர் கொஞ்சங் கூட முயன்று வேலை செய்வீரானால் இப்பொழுது நகல காலம். குடும்பப் பகுதியில் எல்லாம் நல்லாயில்லை 17-ந் திகதி வரையும் கொஞ்சச் செலவையும் தொந்தரவுகளையும உமக்கு நண்பர் உண்டாக்கக்கூடும். அதன் பின் அவர்கள் உதவியா யிருப்பார்கள் புதுமுயற்சிகள் நல்ல பலன்களை மெதுவாக ஆனால் திடமாகத் தரும். பத்தாம் பதினொராம் பன்னிரண்டாம் நாட்களின் பிற்பகல் கூடாத காலம்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்.**

செலவதிகரிக்கும். 15-ந் திகதிக்குமுன் கருமங்கள் செய்து முடிக்கவேண்டும். இரகசியப் பகைவரால் சில தொந்தரவுகளுண்டாகும் ஆனால் நீர் அவர்களை வெல்லக்கூடியதாயிருக்கும். குடும்ப நிலைமைகளும் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது 13-ம், 14 ம் திகதிகளும் 15-ம் திகதி காலையும் எல்லாவற்றிலும் பழுதானவையா யிருக்கும்.

**மிதுனராசி மிருகசீரிடம், 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**

கருமங்கள் 17-ந் திகதி வரையில் தளப்பமாகவே யிருக்கும் நீர் பல கண்டனங்களையும் எதிர்ப்புகளையும முன்னிடுவீர். அதன்பின் அதிக திருத்தங்கள் நிச்சயம். 15-ம் 16 ம் திகதிகளும் 17 ம் திகதி காலையும் உம்மை அதிகம் நிலைகுலைக்கும் ஆனால் ஆபத்தான விளைவுகளுக்கு அறிகுறிகள் ஒன்றும் இல்லை.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

இந்த இரு வாரங்களிலும் உமக்கு மனச் சமாதான மிருக்கமாட்டாது எல்லைகடந்து மற்றவர்களுக்கு உதவி செய்யப் போவதால் நீர் இடைஞ்சல்களுக் குள்ளாவீர். புது முயற்சிகள் கவனமாய்க் கையாளப் படவேண்டும் 18, 19-ம் நாட்கள் மிகக் கூடாதவை இனத்தவர்களுடனும் நண்பர்களுடனும் சண்டைகளைத் தவிர்க்கவும்.

**சிம்மராசி மகம், பூரம், உத்தரம், 1ம் பாதம்.**

ஒரு தளப்பமான காலம்; இழிமொழி பரப்புவோரைப் பற்றி எச்சரிக்கையா யிருக்கவும். முற்பகுதியில் கொஞ்சக் காசு பெறுவீர் ஆனால் பெறுகின்ற முழுக் காசையும் செலவழித்து விடுவீர் உம்முடைய இனத்தவர் சிலர் உமக்குக் கோபம் உண்டாக்குவர். அவர்களுட் சிலர் உம்மோடு கோபிக்கக் கூடும். இருபதாம் இருபத்தொராம் நாட்கள் எல்லாவற்றிலும் பழுதானவை.

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

புதிய சமூகத் தொடர்புகளுக்கு இது நல்ல காலமாகும். 17-ந் திகதிவரையும் சிறிது எதிர்ப்பை நீர் முன்னிடவேண்டி வரக்கூடும். அந்தத் திகதியின்பின் உம்முடையவழியில் வரும் எல்லா இடையூறுகளும் நீங்கக் காண்பீர், பண நிலைமை திருந்தவேண்டும் 22-ம் 23-ம் திகதிகளைக் கவனமாய்க் கழிக்கவும்.

**துலாம் சித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்**

இந்தமாசம் முடியுமுன் சிலமாற்றங்களுக்கு அறிகுறிக ளிருக்கின்றன. அது குடும்பச் சூழலிலாயிருக்கலாம், அல்லது கந்தோரிலாயிருக்கலாம், செலவதிகரிக்கும். இரகசியப் பகைவரைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும், உம்முடைய பெண்ணின நண்பர் உமக்குச் சில துன்பங்களை உண்டாக்கக்கூடும்.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை.**

17-ந் திகதியின்பின் உம்முடைய இடைஞ்சல்களிற் பலவற்றை நீர் நீக்கக்கூடியதாருருக்கும். அதுவரையும நீர் சமாளிக்க வேண்டியதாயிருக்கும். குடும்ப நிலைமைகள் அதிகம் நல்லாயிருக்கமாட்டா. வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். இவ்விரு வாரத்தின் பின் அரைப்பங்கு நல்ல காலமாகவும் நன்மைகள் தரக்கூடியதாகவும் தோற்றுகின்றது.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்.**

17-ந் திகதிக்குமுன எந்தவிசேட காரியத்தையும நீர் பார்ப்பது நல்லது. புது முயற்சிகளில் பணமிடுதல் இந்தத் திகதிக்குமுன் செய்ய வேண்டும். 17-ந் திகதிக்குப் பின் காலம் நல்லாயில்லை. நீர் சிறிது கண்டனத்தை முன்னிட வேண்டிவரக்கூடும். ஆனால் எவ்வித ஆபத்தான விளைவுகளும் உண்டாவதற்கு அறிகுறிகள் இல்லாமையால் நீர் மனச் சஞ்சலப்படவேண்டாம்.

**மகரராசி உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

17-ந் திகதிவரையும் இரகசியப் பகைவரைப் பற்றி எச்சரிக்கையா யிருக்கவம். நீர் சண்டை தொடுக்க முந்துவீர். அந்தத் திகதிவரையும் புது முயற்சிகள் பின் போடப்பட வேண்டும் அந்தத் திகதியின்பின் குடும்ப நிலைமைகளும் பண நிலைமைகளும் திருந்தவேண்டும். பகைவர் அழிவும் நிச்சயம்

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.**

நீர் ஆறுதலெடுக்க விரும்பக்கூடுமானாலும அப்படி ஆறியிருக்க உமக்கு வசதி சிறிதுமிருக்கமாட்டாது. இந்த இருவாரமும் சமூக அலுவல்களும் உத்தியோக அலுவல்களும் நிறைந்திருக்கும். நீர் கொஞ்சப் புகழும் பெற்று பிரயோசனமான சில தொடர்புகளையும உண்டாக்குவீர். தனலாபங்கள் நிச்சயம், ஆனால் கொஞ்சமும் மிச்சம்பண்ண உமக்கு முடியாது.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

உம்முடைய காரியங்களில் அதிக திருத்தங்களைக் காண்பீர், புதுமுயற்சிகள் நல்ல பலன்களைத் தரும். நல்ல சமூகத் தொடர்புகளும் புகழும் நிச்சயம். ஆனால் நீ அமைதியில்லாதிருப்பீர். நண்பருக்கு உதவிசெய்ய எல்லைகடந்துபோகவேண்டாம் இழிமொழிகளைத் தவிர்க்க வேண்டுமானால் கூடாத ஒழுக்கமுடையோர் தொடர்பிலிருந்து நீங்கி நடக்கவும்.

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarpannai. Issue on Friday April 8, 1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org